SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்

புத்] ௰௧ சிதம்பரம் ஏவிளம்பி ௵ ஆடி ௴ ௨௯ உக்கு 1897 ௵ ஆகஸ்ட் ௴ 12உ [இல ௯

வைதிகசந்திரமௌலி.

மகாபாசுபதாஸ்திர பராவர்த்தனப்பிரயோகம்

தொடர்ச்சி

(10) 6-ம் அதிகரணத்தில்—

யதா ப்ரஸ்பஷ்டப்ரகாஶஶ்சந்த்ர: திரோதாயகஜலதாபகமே ஸ்பஷ்டப்ரகாஶ: | ததா தஸ்ய நித்யஶுத்தஸ்ய திரோதாயகாணவமலாபகமே ஸ்வத:ஶுத்தி: ॥ தத ஆநந்தமய: பரமேஶ்வர ஏவ ॥

'எங்ஙனம் நன்கு பிரகாசிக்கும் சந்திரன் மறைத்திடும் மேகம் ஒழிந்துழி தெள்ளிய பிரகாசம் பெறுவான்போற்றே ன்றவனே, அங்ஙனம்ஆன்மாநித்திய சுத்தனாயினும் மறைத்திடும்.மலம் தொலைந்தால் பரமேசுவரனே (இதுவே) ஆன்மசுத்தியாம்ஆகையால் ஆனந்தமயன் பரமேசுவரனே என்றீர். இது தான் உமது மதத்துக்குத் தகுமா? உமது மதத்தில் ஈசனடிசேர்ந்து அவனுக்கு மீளாத்தொண்டனாய் ஆண்டானடிமைபாவமேயன்றோ முத்தியெனப்படும்.

[11.) 7-ம் அதிகரணத்திலும்—

ஸர்வப்ரகார நிர்விஶேஷஞ்ச விஶிஷ்டாத்விதீயஸ்வபாவம் என்று. விசிஷ்டவாதம்பிடித்தவராஉங்கள் பாஷ்யக்காரர்.

(12) 8ம் அதிகரணத்தில்—

'(வயம் ஹி ஶ்ருதிப்ராமாண்யஶரணா:) 'யாம் வேதங்களையே பிரமாணமென வொப்பி யொழுகுவோரல்லவா?' என்றீர். இது தாந்திரீக இதயசங்குவாமே.

(13) அதே அதிகரணத்திறுதியில்—

(ஸமஸ்து பரமேஶ்வர: ஸூர்யமண்டலவர்தீ ஸாவித்ர்யர்த: ஸர்வேஷாம் முமுக்ஷூணாம் த்யேய இதி ஸித்தம்) 'ஆதித்த மண்டலத்துள்ள பரமேசுவரனே ஸாவித்திரி பொருளாவான், எல்லா முமுக்ஷுக்களுக்கும் த்யேயன் என்று துணியப்பட்டது' என்றீர். இங்கு காயத்ரீ மந்திரார்த்தமே சிவன் என்றும், அவனே எல்லா முமுக்ஷுக்களுக்கும் த்யேயன் என்றும் துணிந்த இவரா எந்தவருணத்தவனாயினும் சிவதீக்ஷாவான முக்தி பெறுவான் என்னும் மதத்துக்குப் பாஷ்யக்காரர்?

[14] 9-ம் அதிகரணத்தில்—

ஆகாசப் பிராணசப்தங்கள் சிவபரம் என்பதற்கு ஹேதுவாய் (தத்பேதாத்) அதன் பேதத்தால் என்றன்றே இதனைப் பொருத்தும் பார்ப்போம்.

(15) 10-ம் அதிகரணத்தில்—

(ஸர்வாத்மதயா பரமேஶ்வரஸ்ய லிங்கேந) 'ஸர்வ சொரூபத்தும் எனப்படும் பரமேசுவரலிங்கத்தால், என்றனரே, ஐய, அதுஉமக்கெங்ஙனம் பொருந்தும்?

(16] அதேஅதிகரணத்தில் (ஸமஸ்தவிக்ரஹஸ்யைவ ஸாக்ஷாதுபாஸ்யதயா நிரூபிதஸ்ய பரமேஶ்வரஸ்ய) 'சூரியபகவான் மண்டலத்திலே நேரில் உபாஸ்யனென்று நிரூபிக்கப்பட்ட ப்ரமேசுவரன்என்று காயத்ரீ வாச்யமூர்த்தியே முமுக்ஷூபாஸ்யம் என்றீர். இதுவும் தாந்திரிகர் தலைவலியே,

(17) 11-ம் அதிகரணத்தில்:—

வேதாந்தவிஜ்ஞாநேநைவ ஸம்யக்ப்ராப்தப்ரஹ்மாத்த ஸாரூப்யபாவநயா ப்ரஹ்மபாவமுபகதஸ்ய விமலீக்ருதஸ்ய நஷ்டாஹந்தேஹவிஷய ஸங்குசிதாஹம்பாவஸ்ய ஸம்யக்ப்ரபஞ்சவிஷய ஸர்வாகார பராஹம்பாவஸ்ய வாமதேவஸ்ய 'வேதாந்த விசாரத்தாற்றோன்றிய பிர்ம்மாத்தும ஏகரஸபாவனையால் ப்ரம்மீபாவம்பெற்று மானுஷர் தேகவிஷயமாய்ச் சுருங்கிய அகங்காரம் ஒழிந்து ஸகலப்பிரபஞ்ச விஷய பராஹங்காரம் எய்திய வாமதேவனுக்கு' என்றனரே. உமது மதத்தில் சுவசரீரவாசனை தொலைந்துழி, சர்வாகார பாவனை பிர்ம்மபாவனையாகவுண்டா? இல்லையே. ஆகவே உமது மதநூலா இது?

[18] அதே அதிகரணத்தில் ப்ரஹ்மோபாஸநயா ப்ரஹ்மபாவமுபகதஸ்ய விமலீக்ருதஜீவஸ்ய 'பிரமோ

பாஸனையால் ப்ரம்மபாவம்பெற்று ஜீவபாவம் தொலையப்பெற்றவனுக்கு' என்றார். உமது மதத்தில் பசுத்துவம் தொலைந்திட்டாலும் பதித்துவம் கூடாதுபற்றி பிரபாவப்பேறு எங்ஙனமொவ்வும்? இவ்வளவுடன் ஸ்ரீ-ஸ்ரீகண்டபாஷ்யத்தில் 11-அதிகரணங்களுடன் கூடின முதலத்தியாயத்து முதற்பாதம் விசாரிக்கப்பட்டது.

இனி இரண்டாம்பாதத்தைப்பற்றி விசாரிப்பாம்.

(19.) 2-ம் பாதம் 1-ம் அதிகரணத்தில் கிம்பஹுநா ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணாபியுக்த ஸூக்தி ப்ராமாண்யாத் ஸகலசிதசித்ப்ரபஞ்ச மஹாவிபூதிரூபா மஹாஸம்விதாநந்தஸாந்த்ரா தேஶகாலாதி பரிச்சேதஶூந்யா ஸ்வாபாவிகீ பராஶக்தி: பரப்ரஹ்மணஶ்ஶிவஸ்ய ஸ்வரூபம் ச குணஶ்ச பவதி தத்ரஹிதேன ப்ரஹ்மணா ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ஸர்வகாரணத்வ ஸர்வநியந்த்ருத்வ ஸர்வோபாஸ்யத்வ ஸர்வாநுக்ராஹகத்வ ஸர்வ புருஷார்த்த ஹேதுத்வாதிகம் ஸர்வகதத்வம் ச ந ஸம்பவதி கிம் மஹேஶ்வர ஶிவமஹாதேவ ருத்ராதி திவ்யநாமதேயத்வம் ச ந ஸம்பவதி.

அதிகஞ்சொல்வதிற் பயனென்னே? "சுருதி ஸ்மிருதி, இதிகாஸ புராணங்கள் அபியுக்தசூக்திப் பிராமணங்களால் ஸகல சிதசித் பிரபஞ்சமகாவிபூதிரூபியும், மகாசிற்சக்தி யானந்தரூபியும், சத்தாசொரூபமும், தேசகாலாதியளவுக் கடங்காததும், சுபாவசித்தமுமான பரசக்தியே ப்ரம்மமாய சிவனுக்குச் சொருபமும் குணமுமாம். அச்சக்தியைத்தவிர்த்துப் பிரம்மத்துக்கு ஸர்வஞ்ஞத்துவம், ஸர்வசக்திமத்துவம், ஸர்வகாரணத்துவம் ஸர்வநியந்திரித்துவ ஸர்வோபாஸ்யத்துவ ஸர்வானுக்கிரக கர்திருத்துவ ஸர்வபுருஷார்த்தஹேதுத்துவமுதலியதும் ஸர்வகதத்துவமும் கூடாது. மேலும்மகேசுவரன் சிவன் மகாதேவன் ருத்திராதி திவ்யநாமதேயங்களும்கூடாது" என்றுபிரம்மத்துக்குஉபாதி வசத்தால் மட்டும் நாமரூபங்கள் அமைந்தனவென ஸ்ப்ஷ்டமாய்ச் சொன்னார். மேலும் அந்தசிற்சக்தி ப்ரம்மத்திலும் வேறானதத்துவமல்லவென்றுபலவசனங்களால்வற்புறுத்தியதாதலால் எல் லாம் ப்ரம்மசொரூபமே என்றனர். இது உமக்குச் சரிப்படுமோ? நும்மதத்தில் பரிக்கிரக சத்தியாகிய மாயையே ஈசனுற்றொழிற்படுத்தப் படுவதாக, அது எங்ஙனம் ஈசனது நாமரூப குணரூபமாம்? மேலும் ஈசனுக்கு சிவாதிநாமங்களும் ரூபங்களும் சத்யஸங்கற்பத்துவாதி குணங்களும் மாயா மயமென்றால் ஈசன் நிரூபன், நிற்குணன், நாமரூபவிலக்ஷணன் என்று ஏற்படுகின்றது. அதுமட்டோ, அச்சக்தியே ப்ரம்மத்துக்குத் தருமம் என்றதால்| இயல்பில் அது நிர்த்தர்மகம் என்றும் சக்தியாதி பிருதிவிவரை எல்லாஞ்சிவதத்துவத்துண்டாயது என்றும் அது சிவனாலேதானே வியாபிக்கப்பட்டது 'மண்ணால்குடமாதிபோல்' என்றும் பொருளுடையது

ஶக்த்யாதிப்ருதிவ்யந்தம் ஶிவதத்த்வஸமுத்பவம்|
ஶிவேனைகேன தத்வ்யாப்தம் ம்ருதா கும்பாதிகம் யதா||

என்றவசனத்தால் உண்மையில் மண்ணிற்கடம்போல அதுவே சிவனிடம் சக்தி என்பது புலப்பட்டமையின் கற்பிதமெனக் குறித்தும் உள்ளார். மேலும், இதேவசனம் மீண்டும் பாசுபத்தியாதிகரணத்தில் ஆகமவசனமெனக் குறிக்கப்பட்டது. இவ்வதிகரணத்திலோ, இதுபோன்றஅனேக வசனங்களுடன் வாயுசங்கிதா வசன மீதெனப் பட்டது. அவைகளெல்லாம் பசுபாசங்கள் பதிதத்துவத்துக்கு முன்னிலும் வேறுபட்டன வென்பது உமக்கொவ்வாதாகவே திரிபதார்த்த பேதவாதியாகிய கேவலநிமித்தவாதி புதுச் சைவருக் கிது பாஷ்யமாகாது. மற்று சைவவிசிஷ்டவாதிகளுக்குப் பாஷ்யமாகலாம்.

(20) 2-வது அதிகரணத்தில். (யதா கடாதிஷு வஹ்னி தஸ்யாவ்யாப்தி: ததாவ்யவஶாத் ஸூக்ஷ்மத்வம் ஸர்வதோ மஹத்த்வம்) எங்ஙனம் குடமுதலிய பொருள்களுள் அகப்பட்ட ஆகாயம் சிறிதுபோற்றோன்றி உண்மையில் பெரிது என்று ஈசனுக்கு உபமானம் கொடுத்ததும் அன்றி, தைத்தரீய மகோபநிடதத்தை நன்குவிசாரித்து இடையே

(அ) ப்ராணாதிஜகதாதாநகேந நிர்திஷ்ட:

(ஆ) ஸகலகார்யப்ரதமஹிரண்யகர்பஜனகோ நிமித்தஶ்ச: பரமேஷ்டி:|

(இ) த்யக்தபலகர்மாநுஷ்டாயினாம் வேதாந்தஸ்வாதினாம் ஜிதேந்த்ரியாணாம்—பரமாம்ருதரூப வதயா ப்ராப்யதயா வர்ணித:|

(அ) பிராணாதி, ஜகத்துக்களுக்கு முதற்காரணம் எனப்பட்டன.

(ஆ) எல்லாக்காரியங்களுக்கும் ஆதியான ஹிரண்யகர்பஜனகனும் நிமித்தனும் குறிக்கப்பட்டான்,

(இ) "பயன்களைக் கருதாது கன்மங்களை யனுஷ்டிக்கும் வேதாந்த உண்மை தெரிந்து புலனடக்கம் பெற்றோருக்கு பரமாமிருத ரூபனாய் அடையத்தக்கவனாயுள்ளவன்" என்ற வசனங்களால் ஈசன் ஜகத்துக்குபாதானமும் நிமித்தமும் என்பது மகோபநிஷதப் பொருள்" என்றமையால் இவர் அவ்வுபநிடதம் கேவலநிமித்தவாதம் செய்யும் ஆகமங்களைத் தழுவியதென்றது பொருந்தாதொழிர்ததுமன்றி தான் ஸ்வீகாரஞ்செய்துகொண்ட வாசிரியர்கருத்துக்கு மாறாக முடிந்தது. அதுமட்டோ? மேல் வேதாந்த விசாரணைசெய்தார்க்

சே அந்த வஸ்துப் பிராப்யம் என்றதுமன்றி அவர் நிஷ்காமமாய் யஞ்ஞாதிகன்மங்களையும் செய்வார் என்றனரே. அதுதான் இவர் பிடிவாதத்துக் கொவ்வுமா? மேலும் எல்லாக்காரியங்களுக்கும் ஹிரண்யகர்ப்பன்முதலாமென்றனரே அதுதான் இவ்வாகமிகர் கூறும் ஸ்ருஷ்டிமுறையிற் கூடுமோ? அம்மட்டோ, இதே அதிகரணத்தில் ஜீவஸமஷ்டியென்று ஹிரண்யகர்ப்பனைக் குறித்தார். அவன் நாராயணனுக்குபாதானம் என்றும் சொன்னார். அதுதான் பொருந்துமா? இவர்களுக்குப் பசுஸமஷ்டியுண்டா?

(21) மூன்றாவததிகரணத்தில்—(யதா லோகே நிஷ்டேஷு கும்பாதிஷு ஸ்வஶரீர வ்யதிரிக்தம் ம்ருத்பிண்டம் உபாதானம் த்ருஶ்யதே) ததா ந பரமேஶ்வராத் வ்யதிரிக்தம் மாயாத்யுபாதானம், மாயாதி ஸர்வாத்ம பரமேஶ்வராஜ் ஜகதுத்பத்தே ப்ரமாணவிரோதாய:|

எங்ஙனம் குயவனுதிகளுக்கு குடமுண்டாகவேண்டி தன் சரீரத்துக்கு வேறாக மண்ணுருண்டை முதலியதைக் கொள்வதுபோல் இங்கு பரமேசுவரனிலும் வேறான மாயாதிகள் உபாதானமில்லை; மற்று மாயாரூபனான பரமேசுவரனிடத்தே உலகம் தோன்றுகிறது என்று சொல்லி கேவல மாயோபாதான வாதமாகிய இவ்வாதியின் மாயாவாதத்தை மறுத்தார். மேலும் இடையே 'ஶ்ருதிரேவ ஹ்யத்ர ப்ரமாணம்' வேதமே பிரமாணமென்று மேற்கண்ட பொருளுக்கு முறணும் வசனங்கள் அப்பிரமாணமெனவும் குறித்தார். இம்மட்டோ? மேலே

'இச்சாஶக்திபித்தௌ நிகிலஜகச்சித்ரமுன்மீலயதி'

இச்சாசக்திச் சுவற்றில் சகல ஜகச் சித்திரங்களையும் எழுதுகிறார் என்றார். இதனால் எப்படி சுவரின்றிச்சித்திரத்துக்கு சொரூபமில்லையோ அங்ஙனம் ஈசுவர சங்கற்பமாத்திரமே ஜகம் என்று ஏற்பட்டது. மேலும் அவ்விச்சாசக்தியும் அவனிலும் வேறல்லவென்றமையால் ஸ்ரீலோக குருஸ்வாமிகள் போதார்யையில்

ஸ்வேச்சயா ஸ்வபித்தாவபி விஶ்வஜகச்சித்ரோன்மீலநாதி விதம்| ஸ்வயமேவ கேவலஶிவஸௌக்யஸ்வரூபம் ப்ராப்நோதி பராத்மா|

'ஆன்மப்படக்கதன்னில்ஆன்மாபலவாய
மேன்மைசேர்சித்திரஞ்செய்து பான்மையுடன்
தன்மட்டேநின்றுதானேயதைக்கண்டு
பன்முறையானந்தமெய்துவான்'

என்றுசொன்னவிஷயத்தையேதழுவியவராயினர். அங்ஙனமாயின் சுத்தாத்துவிதம் நிலைத்திடுமேயென நினைத்து

'ஶிவஸ்ய மஹிமா கேந விஜ்ஞாயதே தத்வத:' சிவன் மகிமையை உண்மையாய் அறிபவர் யாவர் என்று பிரசங்கித்தார். இது இவ்வாதியாருக்கு ஒரு பெருவிரோதமாயிருக்க இப்பாஷியத்தில் இவருரிமை பாராட்டியது பண்டிதரிடம் நகைபெறுவதுதிண்ணம்.

(22) நான்காம் அதிகரணத்தில் ஜீவேஶ்வரயோஸ்ஸாதர்ம்யேபி வைஷம்யம் அநாதிமலஸம்பந்தாஸம்பந்தாப்யாம்?

ஜீவனுமீசனும் ஸமமேயாயினும் அனாதிமல சம்பந்தம் அதனின்மைகளால் வேற்றுமை என்றார். இதனால் சிவசமவாதியாகிய இவர், சிவஞானப் புலவராதியோரை ஆசிரியராய்ப்பெற்ற இவர்க்கு ஆசிரியராவதெப்படி? இப்பாடியம் தான் இவர் மதப்படியாவதெங்ஙனம்?

(23) 7-ம் அதிகரணத்தில் (தஸ்மாத் ஸர்வாத்மா ஶிவ: பரமேஶ்வர: இதி யுக்தம்) 'ஆதலால் சர்வரூபனானசிவனே பரமேசுவரனும் என்றது உசிதம்' என்றும் (ஸகலசேதநாநாம் உபாதானதயா ஸர்வாத்மானுப்ரவேஶோ விராட்ப்ரகாஶஸ்ய யுக்த:)

'எல்லாச்சேதனர்களுக்கும் உபாதானமாதலால் விராட்டுக்கு ஸர்வபூதானுப்பிரவேசம் கூடும்' என்றும் நிரூபித்தார். இவர்மதத்தில் சேதனனுக்குபாதானம்வேறுசேதனனா? இதற்கிவர் என்ன சமாதானமளிப்பார்.

இங்கு முதலத்தியாயத்து இரண்டாம்பாதம்
முற்றிலும் விசாரிக்கப்பட்டது.

இனி மூன்றாம்பாதத்தை விசாரிப்பாம்:—

24 இரண்டாம் அதிகரணத்தில் நிரதிஶயாநந்தஸ்வரூபம் ப்ரஹ்மைவ ப்ரபஞ்சாகாரேண த்ருஶ்யமானமோ பவதி

'நிரதிசயானந்தஸ்வரூபமான பிரமமே பிரபஞ்சரூபமாகக் காணப்படும்' என்றார். ஐய, இது நம்மதத்தில் பொருந்துமா?

25 அதே அதிகரணத்தில்—(தத்ரோக்தானாம் ப்ரஹ்மணா ஸாத்ருஶ்யம் தஸ்மின்ஸதி ப்ரபஞ்சத்ருஷ்டிஶ்சேதி ஸர்வம் ஸமீசீனம்)

'ஆகையால் முத்தர் பிரம்மத்துடன் சமானராவதும் பிரம்மீ பூதப் பிரபஞ்சத்தைக் காண்பதும் உண்டென்பதெல்லாம் பொருந்தியது' என்றார். இவர் சித்தாந்த சிவஞானபோதத்தில் 10-ம் சூத்திரம் ஸ்பஷ்டமாய்:—

ஶிவேநைக்யம் கத்வா ஸித்தோ விகலிதநிகிலவ்ருத்திக:|
ஶிவாயத்தஸ்வாநுபூத்யா ஸம்ஸ்ருஷ்ட: ஸவித்யா நாஸம்பந்திநா||

'சிவனுடன் ஐக்யம்பெற்று சித்தனுய் தன் விருத்திகளெல்லாம் சிவாதீனமாக மலமாயைகள் அணுகாவழி சுவானுபூதிபெற்றவனுவான் என்று உலக அறிவற்ற ஜீவனுடன் கலப்பான்' என்ற சித்தாந்தம் வெளியாகிறது. அங்ஙனமாக, அன்று ஜீவன் வேருய் உலகானுபவம் உள்ளவனுமாம் என்றசித்தாந்தம் இவருடையதாமா?

(26) 6-ம் அதிகரணத்தில்— அங்குஷ்டமாத்ர: புருஷோ மத்ய ஆத்மநி திஷ்டதி 'பெருவிரலளவுளான்புருடன், ஆன்மாவின் நடுவிலுளான்' என்ற கடவல்லி வாக்கியத்துக்குச் சித்தாந்தப்பொருள் கூறுமிடம்

'ஜ்யோதிர்லிங்கரூப உபாஸகாநாம் ஹ்ருதயே திஷ்டதி'

'ஜோதிலிங்கருபனுய் உபாஸகர் இருதயத்தே இருப்பான்' என்று 'இதயத்தே ஈசன் ஆன்மாக்களுக்குள்ளான்' என்ருர். அதேஅதிகரணத்துள்ள சூத்திரமும் (ஹ்ருத்யபேக்ஷயா து மநுஷ்யாதிகாரத்வாத்) 'இருதயவளவைநோக்கி மனிதரதிகாரியாதலால்' என்று அதேபொருள் சொல்லியது. இங்ஙனமிருக்க இவ்வாதியார் (அணோரணீயாந் 'அணுவுக்கணுவாம்' என்றவசனத்துள்ள குகை என்னுஞ் சொல்லுக்கு ஸ்ரீ-ஜகத்குருஸ்வாமிகள் ஆத்மாவெனப் பொருள்செய்யத்தவறினர் என்றது எவ்விதம் ஒவ்வும்? இங்குள்ள ஆத்மபதமே இதயபரமாக வியாக்கியானம் ஸ்ரீமத் வேதவ்யாஸமுனிவரும் ஆசிரியர் ஸ்ரீகண்ட யோகிகளும் செய்திருக்க, அதற்கு விருத்தப்பொருள் கூறும் இவர் மதத்துக்கு இது பாஷ்யமாமா?

(27) 7-ம் அதிகரணத்தில்— (உபநயந ஸம்ஸ்காராபாவாத் வேதாத்யயநாபாவேந தேஷாம் வேதாந்த விசாராஸம்பவாத் ப்ரஹ்மபோதாநுபபத்தே:)

'உபநயன ஸம்ஸ்காரம் பெற்றுவேதாத்யயனஞ்செய்வது அவருக்கின்மையால், அவர்வேதாந்தவிசாரம் செய்யாதுழி ப்ரம்மஞ்ஞானம் கூடாமையின்' என்ருர். இவ்வாதியார் இதற்கு யாதுமறுப்புக்கூறுவார். இவருக்கு உபநயன மில்லாதபோதிலும் சிலசமஸ்காரமே ஞானத்துக்குப் போதுமாமே. மேலும் அதே அதிகரணத்தில் வேதங்கள் அனுதி நித்தியங்கள் என்றனரே, அதுதான் இவருக்குச் சம்மதமா? வேதத்தையோதுவதற்கு உபநயனம் வேண்டினும் ஆகமத்துக்குச் சர்வவர்ணசாதாரண சிவதீக்ஷை போதுமானதால் அதனுல் ப்ரம்மஞ்ஞானம் பெறலாமே எனநினைக்காது 'சுருதியானும் ஸ்மிருதியானும்' என்று வேதங்களையும் மனுவாதிதருமசாஸ்திரங்களையுமே எடுத்துவருகிருர். அதுமட்டுமே எங்ஙனம் இவ்வாதியார்க்குத் தகும்?

(28) அதே அதிகரணத்தில்— (வேதஶப்தேப்ய ஏவாதௌ ஸர்வஸ்ய ஜகதஸ்ஸ்ருஷ்டே:)

'வேதசப்தங்களாலேதான் ஆதிகாலத்தில் எல்லாச் சம்ஸ்தைகளையும் சிருஷ்டித்தார்' என்று வேதமூல சிருஷ்டி கூறினர். அதையேனும் ஒப்புவாரா இவர்.

(29) 8-ம் அதிகரணமாகிய அப சூத்திராதிகரணத்தில் உபநயந ஸம்ஸ்காரமில்லாத வருணத்துக்குப் பிரம்மவித்தையில் அதிகாரம் இல்லையென்று ஸ்பஷ்டமாய் சூத்திராநுசாரியாய் உபதேசித்திருப்பதால் அது சர்வ வர்ண சாதாரணுதிகாரமுள்ள காமிகாதி அவைதிக சிவாகமங்களைக் கடைப்பிடித் தொழுகும் இவ்வாதியாருக்கு எங்ஙனம் சாதகமாகும்? இப்பாஷ்யந்தான் எங்ஙனம் ஒவ்வும்?

[30] அதேஅதிகரணத்தில்— ஶூத்ராணாமிதிஹாஸபுராணாதிஜ்ஞாநம் பாபக்ஷயஹேதோ:|

'சூத்திரர்க்கு இதிஹாஸ புராணங்களைக்குறித்தும் பாபக்ஷயத்துக்காகவே' என்று வேதோபப்பிரும்மண புராணங்களில் சாக்ஷாத் பிரம்மவித்தியா விசாரஞ்செய்வது சூத்திரருக்குக் கூடாதென்று வற்புறுத்திய ஆசிரியர் மதம் வேதங்களுக்கும் மேலானதுமான ஆகமங்களில் சூத்திரர்க்கு அதிகாரம் உண்டென்று சொல்லும் இன்நவீன சைவருக்கு ஒவ்வுமோ.

இதுடன் மூன்றும்பாதம் முடிந்தது. இனி நான்காம் பாதத்தைக் கவனிப்போம்:—

(31) 1-ம் அதிகரணத்தில்— (ந தாந்த்ரிகோ மஹாந் பவதி] 'தாந்திரிகமான மகத்தாகாது' என்று கபிலமதத்தைத் தந்திரமென இகழ்ந்தாரே, இவர்தாமு தாந்திரிக சைவருக்குப் பாஷ்யகர்த்தா?

(32) 2-ம் அதிகரணத்திலும், மும்முறை ஸாங்கியரைத் தாந்திரிகர் என்றிகழ்ந்தார்; அது எப்படி இவர்க்குதவும்?

(33) 3-ம் அதிகரணத்தும் பன்முறைதாந்திரிகர் என்று சாங்கியரை இகழ்ந்தும் அவர் கூறியவாறு இருபத்தைந்து தத்துவங்கள் வேதங்களில் சொல்லப்பட்டன அல்லவென்றும் மறைத்தனரேயன்றித் தத்துவங்கள் முப்பத்தாறு என்று துணிந்திட்டாரில்லையே. அதுதான் எப்படி இவருக்குச் சாதகம்? மேலும் அதிகரண சூத்திரம் (ந ஸங்க்யோபஸங்க்ரஹாதபி நாநாபாவாததிரேகாச்ச) 'சங்கைமட்டாலல்லப் பலபல்வாதலாலதிகமாதலினும்' என்று இருபத்தைந்து என்ற சங்கை ஒன்றைக்கொண்டே அவை

சாங்கியதத்துவங்கள் எனல் கூடாது என்றதேயன்றி, தத்துவங்களை இத்துணையெனக் குறிக்கவில்லையே.

(34) 6-ம் அதிகரணம் முழுவதும் அபின்னநிமித்தோபாதானவாதத்தை விரித்து இவ்வாதியார் கொண்டொழுகும் ஆகமங்கள் கொண்ட கேவலநிமித்தவாதத்தை மறுத்து அதில் பரிணாமத்தையும் ஸ்தாபித்தனரே. இது இவ்வாதிக்கொவ்வுமா? மேலும் அதே அதிகரணத்தில் பரிணாமமுள்ளமைப் புக்கெட்டு வேறமைப்புப்பெறுதலாகவே அங்ஙனமீசன் பரிணாமியரவனே என்று எடுத்து 'சரீரத்தினிளமை முதுமைகளைப்போலவே ஒவ்வுமென்று ஒரு சிறுவழிவிட்டனரே; அதுதான் இவருக்கொவ்வுமா?

(35) அடுத்த மூன் அதிகரணத்தில் காரியகாரணங்களுக் கைக்கியம் சொன்ன ஆசிரியர் ஔடுலோமியார் மதத்தை மறுத்து ஆசிரியர் காசகிருத்ஸ்னர்கொண்டபடி சரீரசரீரிகளாகப் பிரபஞ்ச பரமேசுவரர்களைக்கொள்வதே நியாயமென்று நாட்டி, உடனே அங்ஙனமாயினும் உபயகாரணவாதம் சர்வசம்மதமேயன்றி கேவல நிமித்தகாரணவாதமங்ஙனமாகாதென்றனரே. அதுதான் இவருக்கொவ்வுமா?

(36) 6-ம் அதிகரணத்திற்முனே (ஸாக்ஷாச்சோபயாம்நாநாத் 'ஸாக்ஷாத்இருவகை கூறப்படுதலால்' என்று வியாஸரே சூத்திரமருளியிருக்க, அதற்கும் ஆசிரியர் உபயகாரணவாதமே வேதங்களுள் சொல்லப்பட்டதெனவும் தமதுமதமெனவும் கொண்டிருக்க, அவ்வாசிரியர் பாஷ்யம் அந்தோ! கேவல நிமித்தவாதிகளானசிவாத்துவிதசப்தசொரர்களுக்குப் பாஷ்யமாம்.

(37) 7-ம் அதிகரணத்தில் சுருதி ஸ்மிருதீதிகாசபுராணங்கள் ஒருபொருட்கொண்டு முடிந்தனவென்றும் அவைகளில் வேற்றுமை தோன்றுமிடம் பரிகாரமார்க்கமும் சொல்லி நிருபித்து இறுதியில் அவையெல்லாம் வேதாந்தங்களையே உபபிருங்கணஞ் செய்வனவென நாட்டுகின்றார். அப்படிச்சொன்னவர் தத்துவநிர்ணயக்கருவிகளில் ஏன் ஆகமங்களைச் சேர்த்தாரில்லை? சேர்த்திட அவர்க்குச் சம்மதமில்லையோ, அல்லதுஅவை கணிததத்துவநூல்கள்என்றே அவர் கருதினார் இல்லையோ! புராணங்கள் சிவாதிதேவதைகளைப்பல்வாய் பரம்எனக் காட்டுகின்றனவெனக் காட்டி அவற்றிற்குப் பரிகாரம் சொன்னவர் ஏன் சைவவைஷ்ணவசாக்தாதி ஆகமங்களை எடுத்து அவற்றுள் சிவாகமங்களைச் சிறப்பிக்கக் கூடாது. மேலும் வேதங்களை உபபிருங்கணம் செய்வன புராணேதிஹாஸங்கள் என்றனரேயன்றி அவை தாந்திரிக தருமத்தையுஞ்சொல்லும் எனவெங்கும் குறித்தனரில்லையே. மேலும் ஸ்ரீ-ருத்திரவிசாரத்தில் 'மன்யு' என்றசொல்லுக்கு யஞ்ஞம் என்று பொருளுரைத்தவராய் இவ்வாசிரியர் 'சிலபாகம்' என்மிடமறந்தார்போலும்! ஆசிரியர் எடுத்தகாரியம் வேதாந்தவிசாரமாகையால் இதற்குச் சம்பந்தப்பட்டவைகளான மந்திரப்ராம்மண கற்பஸ்மிருதீதிஹாஸபுராணோபயுக்த சூக்திகளை விசாரிப்பதே நியாயமாகையால் அவைகளைமட்டும் விசாரித்து அவ்வேதவேதாந்தங்களுக்கு செவ்விதத்தும் சம்பந்தப்படாத காமிகாதிகளை விட்டது உசிதமே. இவர்இதற்கெல்லாம்யாதுசமாதானம் சொல்லுவார் பார்ப்போம். மேலும் கன்மகாண்டங்களையும் புராணங்களையும் விசாரித்து பரமேசுவரன் பெருமைவிளக்கிய ஸ்ரீகண்டயோகிகள் ஆகமங்களைவிட்டொழித்தது மிகப் பரிதாபமே. இதனால் யாம் வேதசிவாகமங்கட்கு வேற்றுமை காண்கிலேம் என்று இவர் சொன்னதாக அதிகரண சம்பந்தமின்றிப் பாசுபதாதிகரணத்தில் இருப்பதைப்பற்றி அங்கே அக்கற்பனையை விசாரிப்பாம். இவ்வளவு விரோதங்களுடன் முதல் அத்யாயம் நான்காம் பாதங்களுமாயின. மேல் அடுத்த அத்தியாயங்களையும் விசாரித்து இவருக்குள்ள பாதகங்களையும் அவற்றிலும்காட்டுவோம்.

(38) 1-ம் அதிகரணத்தில் — வேதாத விரோதஸ்ம்ருதிதர்காதிவிரோத:।

'வேதாந்தத்துடன் முரணும் ஸ்மிருதி தர்க்காதிகளின்விரோதம்' என்று வேதவிரோதம் முற்றிலும் பிரமாணங்களுக்குக் குறைவாம் என்று காட்டினதுமன்றி,

வேதோ ஹி பகவாநகிலப்ரமாண ஸார்வ
பௌம: ஸப்ரமாணஸ்ய ஸம்ஸேதி நஸஹதே॥

'வேதபகவானே சகலப்பிரமாண சார்வபௌமன், அவன் அப்பிரமாணகந்தத்தின்ஓர்சிறிதையும்சகியான்'என்றும், வேதங்களே சுவதப்பிரமாணங்கள்; மற்றவை யங்ஙனமல்லவென்றும் காட்டினார். இங்ஙனமாக நமது நண்பர் புதிதாகக்கண்ட சாங்கியயோகவுபநிடதாதி வேதங்கள் படும் அப்பிராமாண்யப்பட்டம் இப்பாஷ்யகாரர் சம்மதமாகுமா? வேதவிரோதம் பற்றிச் சாங்கிய யோகங்களை நிராகரிக்குமிவர்வேதங்கள் சாங்கிய யோகங்களைத் தழுவினவென இவர்சொல்லும்வழி யொப்புவாரா? அப்படி சுவயமத விருத்த சித்தாந்தத்தை இவர்தமது மதபாஷ்யம் என்றதெப்படி?

[39] மேலும் அதேஅதிகரணத்தில் இவரினத்தார் பசுகோடியிற் சேர்த்து வழங்கும் மனுவாதிகளைச் சர்வஞ்ஞரென்று குறித்தனரே- 'மந்வாதிநாம்ஸர்வஜ்ஞாநாம்ஸ்ம்ருதிஷு' 'மனுவாதி ஸர்வஞ்ஞர் ஸ்மிருதிகளில்' என்று மேலும் கபிலர்கண்ட பிரதான காரணவாதத்தை மறுத்தால் அது மாயாகரணவாதஞ்செய்யும் மாயாவாதிகள் எல்லோருக்கும் மறுப்பேயாதலால் இவரை அதுபற்றுதுபோமோ? இங்ஙனமிருக்க இதுதான் இவ்வன்பருக்குச் சகாயமாவதெப்படி?

(40) அதே அதிகரணத்தில்— ப்ரதாநஸ்ம்ருதிராகமமூலா ந 'பிரதானஸ் மிருதி ஆகம மூலமாகாது' என்று ஆகமசப்தத்தால் வேதத்தையேகுறித்து அச்சொல் வேதத்துக்குச் சிறந்ததாக்கி வழங்கினர்.

41) 2-ம் அதிகரணத்தில்— ஸாங்க்யஸ்ம்ருதேரநவகாஶத்வாந்நைய ஶ்ருதிவிரோதோ வக்தவ்ய:। 'ஸாங்கியஸ் மிருதிகளனுமித சுருதிமூலமாயினும்' என்றார் இதனால் பிரத்தியக்ஷசுருதிகளில் அந்தசாங்கியம் மறுக்கப்பட்டதென்றே ஆசிரியர் கருதியதேற்பட, அதைவிட்டு இவர் ஏதோ புதியபகுபாட்டில் அங்ஙனம் சில வுபரிடதங்கள் உண்டென்கிறார். அவ்வாசிரியர் அறியாததை இவரின்று அறிந்தனரோ, அல்லது அவர் தாக்ஷிண்யப்பட்டு விட்டனவைகளை இவர் தாக்ஷிண்யமின்றி எடுத்து விடுத்தனரோ? இதனுண்மையாது? மேலும் நாவைதிக ப்ரதாநகாரணவாதே விஷய: தாத்பர்யம் ஸாங்க்யஸ்ம்ருதிவத் ஸ்ம்ருத்யந்தரஸ்யாபி நதேவ ப்ராமாண்யம்॥

'அவைதிகப் பிரதான காரணவாதத்திலல்ல. அங்ஙனமாயின் ஸாங்கிய ஸ்மிருதிபோலவே அதுவும் மறுக்கத்தக்கதே' என்று வேதவிரோதம்கண்டால்அதுஅவசியம்மறுக்கவேண்டியதென்பதால் இவர்கொண்டொழுகும் அவைதிகபாசுபதம் அவருக்குதவுமோ! அங்ஙனமுதவாதபொழுது இப்பாஷ்யம் இவருக்குதவுமோ?

(42) மூன்றாம் அதிகரணத்தில்—அத: கார்யகாரணயோர்வஸ்த்வைக்யதா நஹீயதே॥

'ஆயின் காரிய காரணங்கள் வஸ்துஒன்றே என்றது கெடாது' என்றார். இது ஜடஜீவரூபகாரியங்களுக்கும் ஈசுவரரூபமான காரணத்துக்கும் ஐக்கியம் சொல்லியதாகவே, எங்ஙனம் இவ்வவைதிகவீனவாதத்திலிது பொருந்தும்?

(43) 4-ம் அதிகரணத்தில் வஸ்து ஒன்று என்றால் அதன்மேல் தோன்றும் பூர்வபக்ஷங்களை எடுத்து மறுக்கின்றனரே, அதுவாவது இவ்வாதிக்கொவ்வுமா?

(44) அதே அதிகரணத்தில்—

நிர்விகாரபுருஷஸந்நிதிவஶாத் ப்ரக்ருதிப்ரவ்ருத்தௌ ஸத்யாமந்யோந்யாத்யாஸோ வக்தவ்ய:॥ அந்யத்ராந்யதர்மாத்யாஸோ ஹ்யத்யாஸ:॥ நிர்விகாரஸ்ய புருஷஸ்ய நஸம்பவதி। அசேதநாயாஶ்ச ப்ரக்ருதேரந்யத்ராத்யாஸோ ந ஸம்பவத்யேவ॥ அத: ப்ரதாநகாரணவாதோ ந ந்யாய்ய:।

'நிர்விகாரபுருட சன்னிதி வசத்தால் பிரகிருதிப் பிரவர்த்திக்கும் என்றால், ஒன்றி லொன்றன் தன்மை அத்தியஸித்தல் ஒவ்வாது. ஓரிடம்மற்றதன் தன்மையைஏற்றியறிதலன்றோ வத்தியாசம். அது நிர்விகார புருடனுக்குக் கூடாது. அசேதனமான ப்ரகிருதியும் ஒன்றை மற்றதில் அத்தியஸித்திலும் கூடாது. ஆயின் பிரதான காரணவாதமே அதனால் பாதிக்கப்படுமோம்' என்று ஸ்ரீஜகத் குருஸ்வாமிகள் ப்ரம்மசூத்திரபாஷ்யத்தின் நூன்முகமான வத்தியாஸபாஷ்யத்தில் கூறியவாறு சற்று முன்பின்னாய் இவர் அத்தியாஸத்தை ஒப்பியிருக்க, அவர்வாதம் இவருக்குதவுமா? மேலும் ஈசன் சன்னிதியில் (அவன் சங்கற்பத்தால்) மாயை தோழிற்பட்டுப் பிரபஞ்சரூபமாம் என்றவழி இவர்மதமாக, 'அதனைமுற்றிலும் ஒவ்வாது' என்று மறுக்கும் இவர்மதம் இந்நவீனசைவருக்குதவுமோ?

[45] அதே அதிகரணத்தில்—

ப்ரபலஶ்ருதிப்ரமாணஸித்தப்ரஹ்மகாரணவாத:।

பிரபலமான சுருதிப்ரமாணசித்தம் ப்ரம்மகாரண (ப்ரம்மமே நிமித்தமும் உபாதானமும் என்றவாதம்) வாதம் என்றுபசங்கரித்தனரே, இதன்கதிதான் இவர்மதத்திலெங்ஙனமாகும்?

(46) 5-ம் அதிகரணத்தில்

சிதசித்ப்ரபஞ்சவிஶிஷ்ட ஏவ ஶிவோऽத்விதீய: காரணம் கார்யம் சேதி விஶிஷ்டஶிவாத்வைதம்-

'சிதசித் பிரபஞ்சங்களுடன்கூடிய சிவனே அத்துவிதீயன், அவனேகாரணமும் காரியமும் என்பதே விசிஷ்ட சிவாத்துவிதமாம்' என்று குறித்தமையால் இவர்மதம் கேவல சிவாத்துவிதமாகாது விசிஷ்டாத்துவிதம் எனமுடிந்தது. அதனாற்றான் இறுதியில் (நாதோ விஶிஷ்டாத்வைதஹாநி:) 'ஆதலால் விசிஷ்டாத்துவிதத்துக்கு குறைவில்லை' என்றார். மேலும் ஈசன் நித்தியசரீரி என்றும் அவனுக்குச் சரீரசம்பந்தத்தினால்யாதும் குறைவில்லை என்றும்ஸ்தாபிக்கின்றாரே. இவருக் கதுசம்மதமா? அவ்விதம் சொல்வது இவர்மதந்தானா?

[47] 6-ம் அதிகரணத்தில்—(௧) ததாபி தயோ: கார்யகாரணயோரநந்யத்வே கிஞ்சித்வைலக்ஷண்யமஸ்த்யேவேத்யாஹ।

(௨) காரணாத் ப்ரஹ்மண: கார்யம் ஜகதநந்யதேவ

(௩) ம்ருதாதி கார்யஸ்யாபி ததேவ த்ருஷ்டம் ம்ருதஸ்தத்வமாஹ்யதே।

(௪) விகாரோ நாமதேயம் ச (வாசாரம்பணம்) விநா யா கதிநோ பாதிரிக்தயா ரூபவ்யவஹாரநிஷேதகம் பவதி।

(௫) ஶுக்திரூப்யே யத்வத் ம்ருதாத்யவஸ்தா ம்ருதாதிநாமதேயம் ச ஸத்யாதிரிக்தோபி ரூபவ்யவஹாரநிஷேதவதி।

(௬) ம்ருத்திகாவாசாரம்பண விஷயோக்தம் ஶுக்திரூப்யவத்॥

(௭) ஶுக்திகேத்யேவ நாமதேயம் ஸத்யம்।

இன்னும் வரும்